# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 07.09.2018ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.வே. நவேந்திரன்,
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 07.9.2018 | **01** | அரசாணை எண் (எம்.எஸ்) 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ) நாள்.19.07.2018 அரசாணை மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண்.76 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ4) நாள்.26.7.2018 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20555/2018/ஆர்1/ நாள்.23.7.2017–ன் படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் துறையூர் நகராட்சி சொந்தமான சொத்துவரியினை சொத்துவரி சீராய்வானது உரிமையாளர்கள், குடியிருப்போர் குத்தகைதாரர்கள் சமர்பபிக்கும் சுயமதிப்பீடு விபர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாக கொண்டிருக்கும் 1.4.2018 முதல் சொத்துவரி சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சொத்துவரிக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய நகராட்சி பணியாளர்களை கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் மண்டலம் ஏ–க்கு ஒரு சதுர அடிக்கு 2.20 (இரண்டு ரூபாய் இருபது பைசா மட்டும்) மண்டலம்–பி க்கு ஒரு சதுர அடிக்கு 1.70 (ஒரு ரூபாய் எழுபது பைசா மட்டும்) மற்றும் மண்டலம்–சி க்கு ஒரு சதுர அடிக்கு 1.10 (ஒரு ரூபாய் பத்து பைசா) எனவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>“நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள், மக்களுக்கான குடிநீர் வடிகால், சாலை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கென பெரும் செலவில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வரும் இவ்வேளையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருவாயை உயர்த்தி அமைக்க வேண்டி கட்டாய நிலையில் உள்ளன. சொந்த வருவாயில் முக்கிய கூறான சொத்துவரியின் மூலமான வருவாயை பொது சீராய்வு மூலமாக பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதே வேலையில் குடியிருப்பு உள்ளிட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் சிரமத்திக்குள்ளாகலாம் என்பதை கருத்தில் சொத்துவரி உயர்வு, தற்போது அரையாண்டு சொத்துவரியில், (1) குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும், (2) வணிக கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் (3) தனியார் பள்ளிக்கட்டிடங்களுக்கு 150 சதவிதத்திற்கு மிகாமலும் (4) தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 200 சதவீதத்திற்கு மிகாமலும் அமைந்திருக்கலாம் என வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு சதவீதத்தை அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றமே அதன் வருவாய் மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள உயர்வு | **தீர்மான எண்.448 அனுமதிக்கப்பட்டது.** |

| | | | |
|---|---|---|---|
| | | சதவீதத்திற்குள் இருக்கும்படியாக நிர்ணயித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு தீர்மான எண்.429/31.7.2018ல் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>**அலுவலக குறிப்பு :**<br>இந்நகராட்சியில் தற்போது ஆண்டு வருமானத்தில் பணியாளர்களுக்குரிய ஊதியம் ஓய்வூதியம் செலவினம் 67–க்கு மேல் ஆகவுள்ளதால் அரசாணைப்படி ஏறத்தாழ 63 காலிப்பணிகள் பூர்த்தி செய்ய இயலாமல் உள்ளது. இந்நகராட்சிப் பணியாளர்களுங்கு அடுத்துவரும் 7–வது ஊதியக்குழு பரிந்துரையின் பேரில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதில் பணியாளர்கள் ஊதியம் 20 சதவீதம் உயர்ந்துள்ளது மற்றும் பொதுமக்களுக்கு அன்றாட அத்தியாவசிய பணிகளை சாலை வசதி, சாக்கடை வசதி, மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் பொது சுகாதாரம் ஆகிண பணிகளைச் செய்யவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர்க்கான நிலுவை மற்றும் நடப்பு கட்டணம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடன் தவணைத்தொகை மற்றும் மாதம் தோரும் செலுத்த வேண்டிய மின்கட்டணம் மற்றும் தொலைபேசி இணைப்புக்கான கட்டணம் ஆகிய இன்றியமையாத செலவினங்களை சொத்துவரி உயர்வின் மூலம் தான் ஈடு செய்ய இயலும் என்பதாலும், சொத்துவரி உயர்வு செய்ய இயலாத பட்சத்தில் பின்னாளில் அரசிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிதி ஆதாரம் கிடைக்க சாத்தியமில்லை என்பதாலும் அரசு நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளுக்கு இணங்க சொத்துவரி உயர்வு அவசியம் என்பதை கருத்தில் கொண்டும் அரசாணையில் உள்ளபடி தற்போதுள்ள அரையாண்டு சொத்துவரியில் (1) குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும், (2) வணிக கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் (3)ம் தனியார் பள்ளி கட்டிடங்களுக்கு 150 சதவீதத்திற்கு நிர்ணயம் செய்யும் (4) தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 200 சதவீதத்திற்கு மிகாமலும், மண்டலம் ஏ–க்கு ஒரு சதுர அடிக்கு 2.20 (ரூபாய் இரண்டு பைசா இருபது மட்டும்) மண்டலம்–பி க்கு ஒரு சதுர அடிக்கு 1.70 (ரூபாய் எழுபது பைசா மட்டும்) மற்றும் மண்டலம் சி–க்கு ஒரு சதுர அடிக்கு 1.10 (ஒரு ரூபாய் பத்து பைசா மட்டும்) எனவும் நிர்ணயம் செய்யவும் மற்றும் வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி சீராய்வு 1.4.2018 முதல் உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3139/2018/அ1) | |

ஒம்/–. வே. நவேந்திரன்.

தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர் நகராட்சி.